# கண்டி இலக்கியச்செய்தி மடல்

9

ஆசிரியர்:- இரா. அ. இராமன் - துணை ஆசிரியர் இக்பால் அலி

மாத இதழ் மார்ச் - 1998 அன்பளிப்பு ரூபா 10.00


கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின்
முதல் வெளியீடான
ரூபராணி ஜோசப்பின்

## ஏணியும் தோணியும்

நூலுக்கு
1996 ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்தியப் பரிசு



மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் முதலாவது வெளியீடான ரூபராணி ஜோசப் எழுதிய 'ஏணியும் தோணியும்' சிறுவர் இலக்கிய நூலுக்கு 1996 ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்தியப் பரிசு கிடைத்தமை ரூபராணி ஜோசப்பிற்கு மாத்திரமல்ல, எமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்திற்கும் பெருமை தரக்கூடியதாகும்.

ரூபராணி ஜோசப் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாவிடினும், நீண்ட காலமாக கண்டியில் ஆசிரியையாக சேவையாற்றியவர். ஆசிரியையாக மட்டுமன்றி கலை இலக்கியத்துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். சிறுகதை, கட்டுரை, நாடகம் போன்றத்துறைகளிலும் முத்திரை பதித்தவர். பேச்சுத்துறையிலும் "சொல்லின் செல்வி" என்ற பட்டத்தைப் பெற்றவர்.

தான் பிறந்த மட்டுநகர் மண்ணில் சிறந்த நாடக நடிகை என்ற பாராட்டை பெற்றவர். பொன்னியின் செல்வன், சிற்பியின் கண்ணீர் ரூபாவதி, சிலம்புச் செல்வி, பதவியா பாசமா?, சத்தியம் வெல்லும், உயர்ந்த உள்ளம், மாமியும் மருமகளும், வீரத்தாய், திப்பிலி என்பன இவர் எழுதி நடித்த இலக்கிய மேடை நாடகங்களாகும்.

1996 ஆம் ஆண்டு மலையக கலை இலக்கியப் பேரவை நடாத்திய இலக்கிய விழாவில் கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நோர்வே கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் நடாத்திய அகில உலகச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "இடம்பெயர்வு" எனும் சிறுகதை, போட்டியில் முதல் பரிசை தட்டிக்கொண்டது. அண்மையில் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் அவர்களின் மணிவிழாவில் இவரது "தரகர் குப்புசாமி" நாடகம் பலரது பாராட்டைப் பெற்றது.

கல்வி, கலை இலக்கிய, சமூக, சமயப்பணிகளில் சேவையாற்றி வரும் இவரது பணி மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின்
இரண்டாவது வெளியீடான
இக்பால் அலியின்

## மாற்றத்திற்கு வாருங்கள்.

கவிதைத் தொகுதிக்கு
அரச தேசியப் பரிசு

முப்பது ஆண்டுகளுக்கு முன் மலையகம் தத்தெடுத்துக் கொண்ட ஒரு நற்கவிஞர் நண்பர் இக்பால் அலி. கல்முனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மலையக இலக்கியத்தோடு, இலக்கியவாதிகளோடு இரண்டற கலந்து விட்டவர். மனித நேயமும், அமைதியும், எளிமையும் இவரிடத்தில் காணப்படும் நல்ல அம்சங்கள்.



கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராகவும், கண்டி இலக்கியச்செய்தி மடலின் துணை ஆசிரியராகவும், கைலாசபதி ஆய்வமையத்தின் செயற்குழு உறுப்பினராகவும், தென்கிழக்கு ஆய்வமையத்தின் தலைவராகவும் சேவையாற்றும் இலக்கிய இதயம் இவர்.

"இக்பால் அலி ஒரு நல்ல கவிஞன்
சிறப்பான பத்திரிகையாளன், ஆற்றல்மிக்க
இயக்க உறுப்பினர் என்பவற்றுக்கெல்லாம்
அப்பால் மக்களை மதங்களுக்கப்பால்
இனங்களுக்கப்பால் நேசிக்கத் தெரிந்துள்ள
ஒரு நல்ல மனிதனாக நான் அடையாளம்
காண்கின்றேன். இதுவே இவரது கவிதைகளும்
பாதிப்புச் செய்கின்றது."

தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல், விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் ஆர். எம். இம்தியாஸின் இக்கூற்று மனங்கொளத்தக்கது.

தனது கவிதை நூலுக்கான அரச விருது கிடைத்தமைக்காக இவர் மாத்திரமல்ல மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் மகிழ்ச்சி கொள்கின்றது. கண்டி இலக்கியச் செய்தி மடல் பாராட்டுகின்றது. மேலும் இவரது இலக்கிய பணித் தொடர வாழ்த்துகின்றோம்..

- ஆசிரியர் -

இது ஒரு மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இலக்கியச்செய்தி மடல்

நாறு மலர்கள் மலரட்டும்
நாறும் கீழ்மைகள் தகரட்டும்

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
18/13, பூரணவத்தை
கண்டி

மார்ச் - 1998


### ஆசிரியர் உரை

1997 ஆம் ஆண்டு,
மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்திற்கு
பெரும் மகிழ்ச்சியை தந்து
விடை பெற்றுக் கொண்டது
ஆம்,
எமது ஒன்றியம் வெளியிட்ட
ரூபராணி ஜோசப் எழுதிய
"ஏணியும் தோணியும்"
இக்பால் அலி எழுதிய
"முற்றத்திற்கு வாருங்கள்"
ஆகிய நூல்களுக்கு
ஒரே வருடத்தில்
இலங்கை அரச விருது
கிடைத்தது.
எமது இலக்கியப் பணிகளுக்கு
கிடைத்த பெருமைமிகு பரிசு இது.
எமது மூன்றாவது வெளியீடாக
மட்டுநகர் முதல்வர்
செழியன். ஜே. பேரின்பநாயகம்
எழுதிய "சீறிவந்த சூறாவளி-78"
என்ற நூல் இம்மாதம் உங்கள் கரங்களில்
தவழ உள்ளது என்ற
செய்தியை இப்புத்தாண்டில்
வெளிப்படுத்துவதில்
பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.
மேலும் எமது இலக்கிய பணி தொடர
உங்கள் நேசக்கரத்தை தருவீர்களா?
மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தை
நேசிப்பவர்களுக்கும்
அதன் வளர்ச்சியில் பங்குக் கொண்டுள்ள
அனைவருக்கும்,
கண்டி இலக்கியச் செய்தி மடல்
வாசகர்களுக்கும்
எமது புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

என்றென்றும்
அன்புடன்
உங்கள்
இரா. அ. இராமன்

---

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின்
துணை நூலகரும்
பத்தரிகையாளருமான
**திரு. ஆர். மகேஸ்வரன்**
கண்டி இலக்கியச் செய்திமடல் வளர்ச்சிக்கு
இரண்டாயிரம் ரூபாய்
**(2000/-)**
வழங்கி ஒரு பத்திரிகையாளனை
கௌரவித்தார்
அன்னாருக்கு எமது நன்றிகள்.

"துரைவி" வெளியீட்டகத்தின்
வெளியீடாக
**ரூபராணி ஜோசப்பின்**
ஒரு வித்தியாசமான விளம்பரம்
சிறுகதைத்தொகுதி
விரைவில் உங்கள் கரங்களில்
தொடர்புகளுக்கு
நிர்வாகி
"துரைவி" வெளியீட்டகம்
85, இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை
கொழும்பு - 13
தினமுரசு இதழில் வெளிவந்த சிறுகதைகளின்
தொகுப்பு

---

**உடுவை தில்லை நடராஜா**
**பிரதம பணிப்பாளராக நியமனம்**

வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அரச அதிபராகக் கடமையாற்றியவரும், பிரபல எழுத்தாளரும் கலைஞருமான உடுவை தில்லை நடராஜா அவர்கள் இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதம பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இவரின் சேவைக்காலத்தில் மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்பது எமது திடநம்பிக்கை

**தொண்டன் சஞ்சிகை நடாத்திய**
**நத்தார் சிறுகதைப் போட்டி முடிவுகள்**

1ம் பரிசு - பொய்ச் சாட்சி
செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

2ம் பரிசு - மதமாற்றமல்ல மனமாற்றம்
திருமதி நளாயினி சுப்பையா
கண்டி.

3ம் பரிசு - கிறிஸ்மஸ் பரிசு
செல்வி சகாயமாலி இரத்னசிங்கம்
வாழைச்சேனை.

பரிசில் பெற்ற இம்மூவருக்கும் கண்டி இலக்கியச் செய்தி மடல் தனது நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவிக்கின்றது.

புலோலியூர் ஆ. இரத்தினவேலோனின்
**விடியட்டும் பார்ப்போம்**
சிறுகதைத் தொகுதி
விமர்சனம் அடுத்த இதழில்
விமர்சிப்பவர்
விமர்சகர் இரா. சிவலிங்கம் பி. ஏ. (சிறப்பு)
(பிரிவுத் தலைவர் திரித்துவக் கல்லூரி - கண்டி)

---

அடுத்த இதழ்
மறைந்த குறிஞ்சித் தென்னவன்
சிறப்பிதழாக வெளிவரும்

மலையக பாரதி குறிஞ்சித் தென்னவன் மறைவையொட்டி அடுத்த கண்டி இலக்கியச் செய்திமடல் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது என்பதை கவனத்தில் கொள்க.

தினகரன் வாரமலர் "மலையகம்" பகுதியில்
**"கங்குலன் பக்கம்"**
வாசிக்கின்றீர்களா? வாசித்துப் பாருங்கள்
கங்குலன் பக்கம் ஒரு பார்வை
அடுத்த இதழில்
எதிர்பாருங்கள்.

**சுதந்திர பொன்விழா**
**ரூபவாஹினி நடாத்திய போட்டி**
**முடிவுகள்**

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நடத்திய சுதந்திரப் பொன்விழா தமிழ் நாடகப் பிரதி, கவிதைப் போட்டிகளின் முடிவுகள்

**கவிதைப் போட்டி**

முதலாம் இடம்
செல்லையா குணரத்தினம்
3 ஆம் குறுக்குத் தெரு
அமிர்தகழி, மட்டக்களப்பு.

இரண்டாவது இடம்
ஜனாப் யு. எல். ஹசனார் சகாப்,
இரண்டாம் குறுக்குத் தெரு,
நிந்தவூர் - 7.

மூன்றாவது இடம்
திரு. கிருஷ்ணன் குலசேகரன்,
இலங்கை வங்கி,
கொஸ்லந்தை.

**நாடகப் பிரதிப் போட்டி**

முதலாம் பரிசு
நீர்கொழும்பு முத்துலிங்கம்
ஆர். 22, ஜயரத்ன வீதி,
நீர்கொழும்பு.

இரண்டாவது பரிசு
கே. கோவிந்தராஜ்
22, கலியாணி வீதி,
வத்தளை.

மூன்றாவது பரிசு
கே. சிவபாதசுந்தரம்பிள்ளை
திருவீதி,
உரும்பிராய்.

சான்றிதழ் பெறும் நாடகங்கள் எழுதியோர்
ஏ. செல்வராஜா சென்மேரிஸ் த. ம. வி.
பொகவந்தலாவ.
எம். உதயகுமார் 131 ஒல்கொட் மாவத்தை
கொழும்பு - 11.
தினேஷா உதயகுமார் 40/7 சிவப்பொறி
திருகோணமலை.
எஸ். குணரத்தினம் 3ம் குறுக்குத்தெரு
அமிர்தகழி
மட்டக்களப்பு.
கருப்பையா கார்த்திகேசு 614. பிரதான வீதி
மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக மண்ணில் பூக்கப் போகும் இலக்கிய மலர்கள்

நூல்:- **இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்**

ஆசிரியர்:- பேராசிரியர் க. அருணாசலம் எம். ஏ. பி. எச். டி

பக்கங்கள்:- 476

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. வ. மகேஸ்வரனின் முன்னுரையுடன் வெளிவரவிருக்கும் இந்நூலில்

1. தமிழ் நாவலும் சிறுகதையும்
2. நவீன தமிழ்க் கவிதையும் - புதுக் கவிதையும்
3. பண்டைய காலத்து தமிழ் இலக்கியங்களும் இடைக்கால தமிழ் இலக்கியங்களும்
4. தமிழ் மரபிலக்கணமும், மொழியியலும்
5. நாட்டார் வழக்காற்றியலும் அவைக்காற்றும் கலைகளும்
6. வரலாற்று நாயகர்களும் அறிஞர் பெருமக்களும்
7. இஸ்லாமிய தமிழ் இலக்கியம்
8. மலையகத்தமிழியல்
9. சாசனவியலும் தொல்பொருளியலும் வரலாற்றியலும்
10. சமூகமும் சமயமும் பண்பாடும்
11. அரசியலும், பொருளாதாரமும்

போன்ற தலைப்புக்களில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது.

**ஆசிரியரின் பிற ஆய்வு நூல்கள்**

பாரதியார் சிந்தனைகள் - சுவாமி விபுலாநந்தரின் சிந்தனைகள் மலையகத் தமிழ் இலக்கியம் - காலக்கண்ணாடி ``இளங்கதிர்`` இலங்கையின் மலையகத்தமிழர். விரைவில் வெளிவரவிருப்பது மலையகத்தமிழ் நாவல்கள்.

### *சிறிவரும் சூறாவளி - 78*

(கட்டுரைத் தொகுதி படங்களுடன்)

ஆசிரியர்:- செழியன். ஜே. பேரின்பநாயகம்

வெளியீடு:- மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் - கண்டி

1978 ஆம் ஆண்டு கிழக்கிலங்கையை தாக்கி அழித்த சூறாவளியின் தாக்கத்தை படங்களுடன் வெளிக்கொணரவிருக்கின்றது இந்நூல்.

தொடர்புகளுக்கு

**செழியன் ஜே. பேரின்பநாயகம்**

மாநகரசபை

மட்டக்களப்பு.

### அதிகாரப் பகிர்வு யோசனைகளும் கருத்துக்களும் கண்ணோட்டங்களும்

தொகுப்பாசிரியர்: ரா. நித்தியானந்தன் (பேராதனைப் பல்கலைக்கழகம்)

பேராதனைப் பல்கலைக்கழக

அரசறிவியற்துறை

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என்போரது கட்டுரைகள் அடங்கிய நூல்

தொடர்புகளுக்கு

**ரா. நித்தியானந்தன்**

334-E பலகொல்ல

கண்டி

**பாவையின் பரிசு**

**தமிழ் இலக்கியம் பார்வையும் — பதிவும்**

போன்ற நூல்களைத் தந்த கலாநிதி துரை மனோகரனின் இலங்கையில் தமிழ் இலக்கியம் நூல் விரைவில் உங்கள் கரங்களில்.

கண்டி இலக்கியச் செய்தி மடல் தொடர்ந்து வெளிவர எமது வாழ்த்துக்கள்

*ஆர். எம். எஸ். பீடி*

*சிமல் பீடி*

240, டெலாங்க - கெலிஓய

### வீரகேசரி ஞாயிறு இதழின் ஆசிரியர் திரு. வி. தேவராஜ் தயாரிப்பில் "இலக்கியச் சாரல்", "இலக்கியப்பகுதி"

வீரகேசரி உதவி ஆசிரியரும், வீரகேசரி ஞாயிறு இதழின் ஆசிரியருமான வி. தேவராஜ் அவர்கள் தயாரித்து வழங்கும் ``இலக்கியச் சாரல்`` இலக்கியப்பகுதி மிகச் சிறப்பாக வீரகேசரி வார இதழில் ஞாயிறு தோறும் வெளிவருகின்றது. இலக்கிய நிகழ்வுகள், இலக்கிய சிந்தனைகள், புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தகவல்கள், கவிதை, நூல் விமர்சனம் இப்பகுதியிலே இடம்பெறுகின்றன. இப்பகுதி மேலும் இலக்கிய ஒளி வீச வாழ்த்துகின்றோம்.

### வீரகேசரி நாளிதழில் "கலாசாரம்" இலக்கியப்பகுதி

பிரபல பத்திரிகையாளரும் எழுத்தாளருமான கே. விஜயன் தயாரித்து வழங்கும் ``கலாசாரம்`` இலக்கியப்பகுதி வீரகேசரி நாளிதழில் மாதம் ஒரு முறை வெளிவருகின்றது. இலக்கியக் கட்டுரைகள், இலக்கிய நிகழ்வுகள், நூல் விமர்சனங்கள் மிகச் சிறப்பாக அமைத்து தருகின்றார். மேலும் இப்பகுதி சிறப்பாக வெளிவர வாழ்த்துகின்றோம்.

### இலங்கையின் முதல் நாளிதழ் 'தேச நேசன்'

இலங்கையில் முதல் நாளிதழ் கோ. நடேசய்யர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'தேச நேசன்' என்ற பத்திரிகைதான் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அன்னார் 1921-ம் ஆண்டு அப்பத்திரிகையை வெளியிட்ட நடேசய்யர் 'தேசபக்தன்', 'சுதந்திரன்' போன்ற நாளிதழ்களையும் வெளியிட்டுள்ளார். இலங்கையில் மலையக மக்களைப் பற்றிய நிறைய நூல்களை பதிப்பித்துள்ளார். தமது எழுத்தின் மூலமும், தொழிற்சங்கம் மூலமும் மலையக மக்களுக்காகவும், மலையகத்திற்காகவும் ஆற்றியப் பணிகள் மகத்தானவை. தமது துணைவியார் மீனாச்சியம்மையையும் இணைத்துக் கொண்டு சேவையாற்றியவர் இவர். கோ. நடேசய்யர் 1947-ம் ஆண்டு இலங்கை மண்ணிலே மறைந்தார். பெருமைக்குரிய அந்த மனிதனை மலையகம் மறக்கக்கூடாது.

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய நாடக விழாப் போட்டி - 1997

மேற்படி போட்டிகள் அண்மையில் கொழும்பு எல்பின்ஸ்டன் மண்டபத்திலும் டவர் மண்டபத்திலும் செப்டம்பர் மாதம் 19ம் திகதியும் 21ம் திகதியும் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

### இந்நாடக விழாவில் பரிசுப் பெற்ற நாடகம்

| | |
|---|---|
| முதல் பரிசு பெற்ற நாடகம் | மூன்றாவது பரிசுப் பெற்ற நாடகம் |
| வெள்ளிநிலா கலாலயத்தினரின் | ஸ்ரீ லங்கா சுதந்திர கலைஞர் |
| கே. கோவிந்தராஜ் எழுதிய | முன்னணியினரின் |
| ``கவ்வாத்துக்கத்தி`` | ``சுவீற் தாத்தா`` |
| பணப்பரிசு - 10,000/=ரூபா | பணப்பரிசு - 5,000/=ரூபா |
| இரண்டாவது பரிசுப் பெற்ற | நான்காவது பரிசுப் பெற்ற நாடகம் |
| நாடகம் | நிழல் நாடக மன்றத்தினரின் |
| அருள் நாடக மன்றத்தினரின் | கலைஞர் ஏ. ஏ. ஜுனைதீனின் |
| ``கொலைகாரன்`` | ``தீர்வு`` |
| பணப்பரிசு - 7,500/=ரூபா | பணப்பரிசு - 3,000/=ரூபா |

இந்நாடக மன்றத்தினர்களுக்கு கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், கண்டி இலக்கியச்செய்தி மடலும் தமது நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

நல்ல உள்ளங்களின் நன்கொடைகள்

கண்டி **E. P. I.** நிறுவன இயக்குனர்

**திரு. டபிள்யு. எல். இராஜரட்ணம்**

**500.00**

பிரபல நாவலாசிரியர்

**டாக்டர். தி. ஞானசேகரன்**

**500.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று வெளியினிலே ..................

–கலாநிதி துரை. மனோகரன்–

## இரு பெரும் அறிவிப்பாளர்கள்

### பி. எச். அப்துல் ஹமீத்

இலங்கை வானொலி வர்த்தக சேவையில் அமரர் எஸ். பி. மயில்வாகனனின் பின்னர் என்னை மிகவும் கவர்ந்த அறிவிப்பாளர், பி. எச். அப்துல் ஹமீத் அவர்களே. கம்பீரமும், தெளிவும், சுவையும் மிகுந்த நடையில் அவர் வானொலியில் நிகழ்ச்சி அறிவிப்பு, விளம்பரம், செய்தி வாசிப்பு என்பனவற்றை நிகழ்த்தும் போது, ஒரு சிறந்த அறிவிப்பாளர் எவ்வாறு செயற்படுவார் என்பதை இனங்காட்டிவிடுவார். நான் எப்போதும் விரும்பிக் கேட்கும் அறிவிப்பாளரில் அவர் முதன்மையானவர். எந்த நிகழ்ச்சியாயினும், அதனைக் களைகட்டச் செய்யும் திறமை அப்துல் ஹமீத்திடம் இயல்பாகவே உண்டு. இப்போதும் கூட ஆண் அறிவிப்பாளரிற் சிலர் (எல்லோரும் அல்ல) கோமாளித்தனமாக முறையில் வர்த்தக சேவையில் நிகழ்ச்சிகளைச் செய்வதுண்டு. ஆனால் அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் அன்று முதல் இன்று வரை எல்லோரையும் கவரத்தக்க ஒலிபரப்பாளராகவே விளங்கி வந்துள்ளார். ஒரு சில அறிவிப்பாளர்கள் அவரை அச்சொட்டாகப் பின்பற்றி அவரைப் போல் பேசியும், அவரைப்போல் சிரித்தும் தமது தனித்துவத்தன்மையை இலகுவாக இனங்காட்டிக் கொள்வதுண்டு. அவர்கள் அவ்வாறு செய்யும் போதெல்லாம் அப்துல் ஹமீத்தே நினைவுக்கு வருகின்றார். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், ஐ. ரி. என். தொலைக்காட்சியில் அவர் வழங்கிவந்த திரைப்படம் தொடர்பான நிகழ்ச்சியொன்று மிகத் தரமாக அமைந்திருந்தது. நான் அந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்ப்பதுண்டு. எனக்குப் பிடித்தமான, பழைய பாடகர்களையும், பழைய பாடல் காட்சிகளையும், புதிய திரைப்பட நிகழ்ச்சிகளையும் அதிற் கண்டு களித்தேன். அப்துல் ஹமீத் சிறந்த அறிவிப்பாளர் மட்டுமன்றி, குறிப்பிடத்தக்க நாடக, திரைப்பட நடிகருமாவார். அத்துடன், ஒரு கவிஞரும் கூட. அப்துல் ஹமீத் என்ற திறமையான ஓர் அறிவிப்பாளர் இலங்கை வானொலிக்குக் கிடைத்தமை, ஓர் அரிய பேறு என்றே சொல்லவேண்டும்.

### ராஜேஸ்வரி சண்முகம்

இலங்கை வானொலி வர்த்தக சேவையில் இன்னொரு சிறந்த அறிவிப்பாளர் ராஜேஸ்வரி சண்முகம் ஆவர். அப்துல் ஹமீத்தைப் போன்று, நீண்ட காலமாக என்னைக் கவர்ந்த அறிவிப்பாளராக விளங்கும் ராஜேஸ்வரி, தமக்கெனத் தனித்துவமான முறையில் தமது நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார். அழகிய குரலில் இயன்றவரை நிகழ்ச்சிகளைச் சுவையாக வழங்குவதில் நல்ல பெண் அறிவிப்பாளருள் அவரும் ஒருவர். தரமான பல்வேறு நிகழ்ச்சிகளை அவர் வானொலி மூலமாக வழங்கி வந்துள்ளார். காலஞ்சென்ற பிரபல அறிவிப்பாளர் கே. எஸ். ராஜாவின் மறைவையொட்டிய அஞ்சலி நிகழ்ச்சியொன்றை வானொலி மூலம் ராஜேஸ்வரி வழங்கிய போது, அதனை செவிமடுத்துக் கொண்டிருந்த எனது உள்ளம் நெகிழ்ந்தது. அண்மையில் இலங்கை வானொலி வர்த்தக சேவையின் 'பிறந்த நாளை'யொட்டி, 'பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சியினை அவர் தொகுத்து வழங்கிய முறை நன்றாக இருந்தது. (சென்ற ஆண்டில் அப்துல் ஹமீத்தும் அத்தகைய நிகழ்ச்சியை நன்றாகச் செய்தார்). ராஜேஸ்வரி சண்முகம் சிறந்த அறிவிப்பாளர் மாத்திரமன்றி, தரமான வானொலி நடிகையும் கூட. இத்தகைய திறமை மிகுந்த ராஜேஸ்வரி சண்முகத்திடம் ஒரு சிறு குறைகளை நான் அவதானிக்கிறேன். ஒன்று, 'பொங்கும் பூம்புனல்' நிகழ்ச்சியின் போது, எதுகை மோனை கலந்த கவிதா நடையில் அவர் ஏதாவது குறிப்புக்கள் சொல்வதுண்டு. சில வேளைகளில் அவற்றுக்கு அர்த்தமே இருப்பதில்லை. இரண்டு, தாம் வழங்கும் சில நிகழ்ச்சிகளின் முடிவில், அந்நிகழ்ச்சிகள் பற்றிக் கருத்துக்கள் தெரிவிக்குமாறு நேயர்களை வில்லங்கமாக கேட்டுக் கொள்வதுண்டு. என்னைப் பொறுத்தவரையில், அது தேவையில்லை என்றே தோன்றுகின்றது. தரமான நிகழ்ச்சிகள் பற்றி, நேயர்கள் தாமாக முன்வந்து கருத்துக்களைத் தெரிவிக்க வைப்பதே அறிவிப்பாளர்களுக்கு அழகு. ராஜேஸ்வரியின் செயல், நேயர்களிடம் புகழைக் கேட்டுப் பெற முயல்வது போல் எனக்குப் படுகிறது. இவை உண்மையில் சிறிய குறைகளே. அவரது திறமைப் பற்றி எனக்கு எப்போதும் உயர்ந்த அபிப்பிராயமே உண்டு. இத்தகைய சிறந்த மூத்த அறிவிப்பாளரான ராஜேஸ்வரி சண்முகம், இளம் வானொலி அறிவிப்பாளர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டி, அவர்களை வளரச் செய்ய முன்வரவேண்டும்.

## திறமைக்குக் கதவடைப்பா?

இலங்கை வானொலிப் பற்றி எனக்குப் பொதுவாக நல்ல அபிப்பிராயமே உண்டு என்பது குறித்து, முன்னரும் குறிப்பிட்டிருக்கிறேன். ஆயினும் கண்ணூறு கழிப்பது போலச் சில தவறுகளும் அவ்வப்போது நடந்து விடுவது உண்டு. சென்ற ஆண்டில் (1996) செய்தி வாசிப்புத் தொடர்பான தேர்வு நடைபெற்ற போது தமிழில் செய்தி வாசிப்பதற்கு தகுதியானவர்கள் என்று கருதப்பட்டவர்கள், தகுதி வாய்ந்த நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிலருக்குச் செய்தி வாசிப்பதற்கு இதுவரை சந்தர்ப்பமே அளிக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது. செய்தி வாசிப்பதற்குத் தகுதியானவர்கள் எனத் தேர்ந்தெடுத்து விட்டுச் சிலரை ஒதுக்குவது, இலங்கை வானொலி தமிழ்ச் சேவைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் கூடிய ஓர் அம்சம் என்பதிற் சந்தேகம் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி உடன் கவனம் செலுத்துவார்கள் என நம்புகிறேன்.

ஐ. ரி. என். தொலைக்காட்சியின் தமிழ்ச் செய்தி வாசிப்புத் தொடர்பாகவும் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன். ஐ. ரி. என். இல் கணிசமான காலமாகத் தரமான முறையில் தமிழிற் செய்தி வாசித்து வந்த ஒரு சிலர் அண்மைக் காலத்தில் ஒதுக்கப்பட்டு விட்டனர். திறமையுள்ளவர்களை ஒதுக்க முனைவது ஒரு தொலைக்காட்சி சேவைக்குப் பொருத்தமானது தானா என்பது சிந்திக்கப்பட வேண்டும். திறமையுடையவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியவர்களே தவிர, ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல.

## பேரினவாதமும் பல்கலைக்கழக பண்டிதர்களும்

பல்கலைக்கழகங்கள் எப்போதுமே ஒரு நாட்டின் உயர் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் கல்விக் கூடங்களாக விளங்குகின்றன. ஆயினும், இலங்கையைப் பொறுத்தவரையில், தமது பெயர்களுக்கு முன்னாலும், பின்னாலும் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்களான பல்கலைக்கழகப் பண்டிதர்கள் சிலரின் போக்குகளும், செயற்பாடுகளும், இந்நாட்டில் ஏலவே பரந்து விரிந்து வளர்ந்துவிட்ட பேரினவாதத்தை மேன்மேலும் தூண்டிவிடுவனவாகவே அமைந்துள்ளன. இந்நாட்டில் பேரினவாதத்தைப் பரப்புவதற்கெனப் பிறவி எடுத்தவர்கள் போன்று விளங்கும் பெருந்தொகையான பௌத்த குருமாருக்கு (எல்லோரும் அல்ல) எந்த வகையிலும் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதை, இத்தகைய பல்கலைக்கழகப் பண்டிதர்கள் உணர்த்தியும் இனங்காட்டியும் வந்துள்ளனர். பாமர சிங்கள மக்கள் நாட்டிற் சமாதானத்தை மனமார விரும்பிக் கொண்டிருக்க, மெத்தப் படித்த இப்பல்கலைக்கழகப் பண்டிதர்கள் சிலர், தாம் பெற்ற கல்விக்கோ, தாம் சார்ந்த பல்கலைக்கழகங்களுக்கோ எத்தகைய மதிப்பும் அளிக்காமல், பேரினவாதத்தின் மீது தாம் கொண்ட விசுவாசத்தை மாத்திரமே புலப்படுத்தி வந்துள்ளனர். இவர்களை நினைக்கும் போது, "கற்றாரை யான் வேண்டேன்" என்று மாணிக்கவாசகர் பாடியது எத்துணைப் பொருத்தமானது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் திரையிசைப் பாடல்களில் இலக்கியம் ஒரு நோக்கு

– செல்வி. இரா. சர்மிளாதேவி –

(சென்ற இதழ் தொடர்ச்சி.........................)

இதே உவமையை கவிஞர் கண்ணதாசன் கைக்கொள்ளும் போது,

"நிலவும் வானும் நிலமும் நீரும்
ஒன்றை விட்டு ஒன்று செல்லுமோ?
நீயும் நானும் காணும் உறவு
நெஞ்சை விட்டு செல்ல எண்ணுமோ?"

எனக் கூறுகின்றார். குறுந்தொகை காதலின் அளவு பற்றிப் பேச இத்திரையிசைப் பாடலோ காதலின் உறவு பற்றி பேசுகின்றது.

புறத்திணை சார்பான காவிய இலக்கியங்களுள் ஒன்று புறநானூறு ஆகும். இந்நூலானது அரசரின் வீரம், கொடை, ஆட்சி சிறப்பு முதலிய இன்னோரன்ன விடயங்களைக் கூறி நிற்கின்றது. இந்நூலிலே அரசரின் வீரச்சிறப்பினை உணர்த்தி நிற்கும் ஒரு பாடல் இதோ,

"கையது வேலே காலன் புனைகழன்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்"

இப்பாடலை அடியொற்றி அமைந்தது போல காணப்படுகின்றது தமிழ்க்குடியின் வீரச்சிறப்பை கூறிநிற்கும் இத்திரையிசைப் பாடல்:

"வேலெடுக்கும் மரபிலே
வீரம் செறிந்த மண்ணிலே
பால்குடிக்க வந்தவனே
நடையைக்காட்டு - வரும்
பகைவர்களை வென்றுவிடும்
படையைக் காட்டு"

சங்கமருவிய காலத்து இலக்கியங்களாகப் "பதினெண்கீழ்க்கணக்கு" நூல்கள் கொள்ளப்படுகின்றன. இந்நூல்களுள் ஒன்று சிலப்பதிகாரமாகும். இதில் மாதவி கானல் வரி பாடுகின்ற போது,

"நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டோமால்
புன்கண் கூர்மாலைப் புலம்புமென் கண்ணேபோல்"

(சிலம்பு : கானல்வரி : 32)

என்று பாடுகின்றார். இங்கும் ஒரு தலைவன் தலைவியை வெறுத்ததாகத்தான் பாடப்பட்டுள்ளது. நீதி நூல் காலத்தில் எழுந்த திருக்குறளும் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தும் வகையில்,

"விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து" (குறள் : 1209)

என்று குறிப்பிடுகின்றது. "நாமிருவரும் பிரிய மாட்டோம்" என்று கூறிய காதலர், இன்று அன்பில்லாதிருத்தலை நினைத்து, என் இனிய உயிர் அழிகின்றது என்று ஒரு தலைவி புலம்புவதாக அமைந்துள்ளது அக்குறள். இதனை அடியொற்றினாற் போல் அமைந்த திரையிசைப் பாடலொன்று இதோ,

"மறவேன் மறவேன் என்றார் உடனே
மறந்து விட்டார் தோழி"

அடுத்து பல்லவர் காலத்தை நோக்கின், இக்கால இலக்கியங்களாகக் கொள்ளப்படுபவை நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் தேவார திருவாசகங்களும் நாலாயிரம் திவ்வியபிரபந்தங்களுமாகும். நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களுள் பிரசித்தி பெற்றது நாச்சியார் திருமொழி ஆகும். இதில் திருமால் மீது காதல் கொண்ட ஆண்டாள் பாடுவதாக அமைந்துள்ளது ஒரு பாடல்,

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம்நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்"

இதில், திருமாலாகிய தன் காதலன் தன் கரங்களைப் பற்றி மாலையிட்டதாக அவள் கனவு கண்டு களிப்பெய்துகிற நிகழ்ச்சியினைக் காணமுடிகிறது. இக்கருத்தினை அப்படியே பின்பற்றி அமைந்துள்ளது பின்வரும் திரையிசைப்பாடல்.

"மத்தளம் மேளம் முரசொலிக்க
வரிசங்கம் நின்றாங்கேஒலி இசைக்கக்
கைத்தலம் நான்பற்றக் கனவுகண்டேன் - அந்தக்
கனவுகள் நனவாக உறவுத்தந்தாய்"

(தொடரும்................)

# தமிழன்னைக்கு மகுடம் சூடும் முஸ்லிம் எழுத்தாளர்கள்



கண்டியின் வடக்கேயுள்ள கல்ஹின்னையில் பிறந்து வளர்ந்த எஸ். எம். ஹனிபா, சொந்த ஊரில் முதலில் தமிழ் மொழியில் கல்வி கற்றார். பின்னர், மாத்தளை விஜய கல்லூரியில் ஆங்கிலம் படிக்கத் தொடங்கி, கண்டி புனித அந்தனீஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் புகுந்தார். பட்டதாரியான பின், சில ஆண்டுகள் பாடசாலை ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

பேராதனையில் இருக்கும்போது, 1953ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழ் மன்றம் அமைத்து, நூல் பிரசுர வேலையை ஆரம்பித்தார். இன்றும் தொடர்ந்து, பிரசுர அலுவல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். இதுவரை எண்பத்தைந்து நூல்கள் தமிழ் மன்றப் பிரசுரமாக வெளிவந்துள்ளன. முதன் முதலில் வெளிவந்த தமிழ் நூல், கலாநிதி சு. வித்தியானந்தன் எழுதிய "இலக்கியத் தென்றல்" என்பதாகும். அவரின் இறுதி நூலான "என் நோக்கில் இஸ்லாம்" என்பதையும் தமிழ் மன்றமே பிரசுரித்தது. பேராசிரியர் க. அருணாசலம் எழுதிய "மலையகத் தமிழ் இலக்கியம்" என்ற நூலும் தமிழ் மன்றப் பிரசுரமாக வெளிவந்தது.

இலங்கை அரசாங்க சார்பில், தேசிய வீரர் தினத்தன்று நடைபெற்ற விழாவில் 'கலாபூஷன்' பட்டம் வழங்கி, கௌரவிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். பல தடவைகள் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்பட்ட எஸ். எம். ஹனிபா, சென்னையில் சென்ற டிசம்பர் மாதம் நடைபெற்ற இலக்கியப் பெருவிழாவில் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். சென்னை மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. கே. மூப்பனார், இவருக்கு விருதை வழங்கினார்.

அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா, பல காலமாக பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். இளவயதிலேயே எழுதத் தொடங்கிய அவர், 1948 ஆம் ஆண்டில் 'சமுதாயம்' என்ற சஞ்சிகையைத் தொடங்கி நடாத்தி வந்தார். கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் சஞ்சிகைக்கு ஆசிரியராயிருந்து, மேலும் அனுபவம் பெற்றார். 1958 ஆம் ஆண்டில் 'தினகரன்' உதவியாசிரியராகச் சேர்ந்து, சுமார் ஏழு வருட காலம் அதே பதவியிலிருந்த அவர், மூன்று வருட காலம் 'சிலோன் டெய்லி நியூஸ்' பத்திரிகையின் உதவியாசிரியராகவும், சொற்பகாலம் "சிலோன் ஒப்ஸர்வர்" உதவியாசிரியராகவும் பணிபுரிந்தார். பின்னர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்திப் பகுதியில் சிரேஷ்ட செய்தி ஆசிரியராகச் சேர்ந்து, பொறுப்பாசிரியராகக் கடமையாற்றிவிட்டு, ஆறு வருட சேவையின் பின், வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார்.

தினசரிப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பல்வேறு கட்டுரைகள் எழுதிய இவர் இலங்கை, மலேசிய வானொலி நிலையங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இலங்கை வானொலியில், முன்னர் பல விஷேச நிகழ்ச்சிகளும் நடத்தினார். 1955ம் ஆண்டில் பாகிஸ்தானுக்குச் சென்ற பல்கலைக்கழக நல்லெண்ணத் தூதுக்குழுவில் அங்கம் வகித்த இவர், திரும்பிய பின் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வானொலியில் சிறந்த விவரணச் சித்திரங்களை அளித்துப் பாராட்டுப்பெற்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில், தமிழ், பொருளாதாரம், வரலாறு ஆகிய பாடங்களைப் படித்துப் பட்டம் பெற்றபின் இலங்கைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து அட்வகேட்டாகப் பயின்ற இவர் 1973ம் ஆண்டில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். 1965ம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார். தொடர்ந்து இலக்கியப்பணி ஆற்றிவரும் இவரை வாழ்த்தி மகிழ்வோம்.

இவரின் தற்போதைய முகவரி
இல. 10, நாலாவது லேன்,
கொஸ்வத்த ரோட், இராஜகிரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் ரத்தின தீபம் விருது - 97

கலைஞர் ராஜா ஜெய்கின்ஸ் அவர்களின் அயராத உழைப்பினால் சென்ற மாதம் கண்டி டி. எஸ். சேனநாயக்க பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் "ரத்தினதீப விருது" - 97 விழா மிகச்சிறப்பாக நடந்தது.

இவ்விழாவில் பேராசிரியர்கள், கலைஞர்கள், சிங்கள திரைப்பட இயக்குனர்கள், நடிக நடிகையர்கள், பாடகர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தார்கள். கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கலை, இலக்கிய, சமூக, விளையாட்டுத்துறைகளில் பணியாற்றிய 36 எழுத்தாளர்கள், ஓவியர்கள், சமூகத் தொண்டர்கள், விளையாட்டு வீரர்களுக்கு ரத்தின தீப விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### கலாநிதி. க. அருணாசலம்

மலையகத்தின் இலக்கிய ஆய்வாளர், தேசிய சாகித்தியப் பரிசு பெற்றவர், பாரதியார் சிந்தனைகள், சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள், காலக்கண்ணாடி, "இளங்கதிர்" மலையக இலக்கியம், மலையகத் தமிழர் போன்ற ஆய்வு நூல்களை தந்தவர். பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக கடமையாற்றுகின்றார். மனிதநேயமும், எளிமையும் இவரிடம் காணப்படும் சிறப்பான அம்சமாகும்.

### திரு. ஐ. ஏ. றசாக்

நீண்டகாலமாக பத்திரிகைத்துறையால் பணியாற்றி வருபவர். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், மனித நேயமிக்கவராகவும் திகழும் இவர் "முஸ்லீம் நேசன்" என்ற பத்திரிகையை நடத்தியவர். ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் தினகரன் பத்திரிகையின் கண்டி நிருபராக கடமையாற்றுகின்றார்.

### கவிஞர் மு. ஈழக்குமார்

7000 கவிதைகளை படைத்துள்ள இவர் 1965 ஆம் ஆண்டு பல கலைஞர்களின் கவிதைகளை தொகுத்து "குறிஞ்சிப்பூ" நூலை வெளியிட்டார். "முத்தமிழ் முழக்கம்" "மலைமுரசு" சஞ்சிகைகளை இணை ஆசிரியராக இருந்து வெளியிட்டார். மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவில் (1995) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அண்மையில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சேகரன் சோமபாலனின் அனுசரணையுடன் இவர் கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

### சிறீலங்கா சிகாமணி – இறைபணிச் செம்மல் நாகலிங்கம் இரத்தினசபாபதி

மலையகத்தில் பேசப்படும் முக்கிய பிரமுகராக திகழ்பவர். கலை இலக்கிய, சமூக, சமயப் பணிகளுக்காக பல்வேறு வகையில் உதவி செய்து வருபவர், கலை இலக்கியவாதிகளை மதிப்பவர், அவர்களை நேசிப்பவர், எத்தனையோ அறிஞர்களை, கலைஞர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார். கௌரவித்து வருகின்றார். கண்டியில் நடக்கும் எந்தவொரு இலக்கிய விழாவிலும் கலந்து சிறப்பித்து வருகின்றார், நாட்டின் பல பகுதிகளிலும் பல இலக்கிய அமைப்புகளால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார். மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் பணிகளில் அசைக்கமுடியாத நம்பிக்கைக் கொண்டவர். மலையக இலக்கியவாதிகளின் இலக்கியக் காவலராக திகழ்பவர். இவர் அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### எஸ். டி. சாமி

தினபதி, சிந்தாமணி வெளிவந்த காலத்தில் எஸ. டி. சாமியின் பெயர் பிரபலம் பெற்றது. அதில் வெளிவந்த ஓவியங்கள் நோக்கத்தக்கது. இவரின் கைவண்ணத்தில் 500 க்கு மேற்பட்ட அட்டைப்பட ஓவியங்கள் வெளிச்சத்திற்கு வந்தன. இலங்கைத் தமிழ் திரைப்படங்களுக்கும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் பெயர் பட்டியல் தயாரித்து வழங்கியுள்ளார். கிட்டத்தட்ட 34 வருடங்கள் ஓவியத்துறையில் முத்திரைப் பதித்துள்ளார்.

### தமிழ் ஒளி பேராதனை ஸர்புன்னிஸா

மலையகத்தின் மூத்த இலக்கியவாதி, பத்திரிகை, சஞ்சிகைகளில் இவரின் படைப்புக்கள் வெளிவந்துள்ளன. முஸ்லீம் பெண்கள் கல்வியை நினைத்தும் பார்க்காத அக்காலத்திலேயே கல்வியை நேசித்தவர், கற்றவர், எழுத்தாளர், பேச்சாளர், பல நூல்களின் ஆசிரியர் என். எம். எஸ். அசன் அவர்களை கணவராகப் பெற்றவர். இவரின் இலக்கியப் பணிகளுக்காக இந்துக் கலாசார அமைச்சு "தமிழ் ஒளி" பட்டம் வழங்கி கௌரவித்தது. அண்மையில் இவரது கிராமிய மனம் வீசும் "கிராமிய மனம்" நாட்டார் இலக்கிய நூல் வெளியிடப்பட்டது.

### திரு. ஏ. சீ. றாஹீம்

கலை இலக்கியத்தை மூச்சாகக் கொண்டவர். கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், சஞ்சிகைத்துறைகளில் முத்திரை பதித்தவர். வானொலி, தொலைக்காட்சி மெல்லிசைப் பாடகர் தோழன், அல் இன்ஹிறாஹ் போன்ற சஞ்சிகைகளை வெளியிட்டவர். 1996ஆம் ஆண்டு வெளிநாட்டவருக்கான கலை இலக்கிய விருதை (கந்தப்பா வேந்தர் வென்னரசு விருது) தமிழ்நாட்டில் பெற்றார். தெல்லிப்பளை மகஜனக் கல்லூரி பிரான்ஸ் கிளையினர் நடத்திய அகில உலகத் தமிழ் கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசு கிடைத்தது. 6000க்கு மேற்பட்ட புதுக்கவிதை, மரபுக் கவிதைகள் எழுதியுள்ளதோடு, 10 நாவல்களும் எழுதியுள்ளார். "தாய்மை தெய்வமாகிறது", "நித்தியா அவள் வித்தியாசமானவள்" ஆகிய இரண்டு நாவல்கள் தினகரனில் தொடராக வெளிவந்துள்ளன. ஏனையவை கையெழுத்துப் பிரதிகளாக உள்ளது. அகில இலங்கை ரீதியில் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் நடாத்திய கவிதைப் போட்டியில் 2 ஆம் பரிசினைப் பெற்றுள்ளார். 400 க்கு மேற்பட்ட சிறுகதைகளை படைத்துள்ள இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதி "இன்னுமொரு சுவாசம்" இவ்வருடம் ஏப்ரலில் வெளிவர உள்ளது.

### சேவாஜோதி – சமூகத்தொண்டர் எஸ். முத்தையா

இவரும், நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்களும் இரட்டையர்கள். மலையக கலை இலக்கிய, சமூக, சமயப் பணிகளுக்காக இருவரும் நல்ல மனதோடு, மனித நேயத்தோடு உதவி செய்பவர்கள் முத்தையா அவர்களின் உள்ளம் இரக்கக் குணம் கொண்ட உள்ளம். யாருக்கும் உதவி செய்யும் நல்ல மனம், மலையக இலக்கியவாதிகளின் உள்ளத்தில் பதிந்துவிட்ட பெயர்தான் முத்தையா என்ற பெயர் எத்தனையோ அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு தனது கரத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார். அண்மையில் போகம்பர சிறைச்சாலை கைதிகளுக்கு தொலைக்காட்சி பெட்டி ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார் என்பது மனங்கொளத்தக்கதாகும். இவர் அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது

### திரு. கனகரத்தினம் தவநாதன்

இவர் ஒரு சிறந்த சமூகத் தொண்டர், கலை இலக்கிய சமூக, சமய பணிகளுக்காக உதவி செய்து வருபவர். கலை இலக்கியவாதிகளை மதிப்பவர். எந்தவொரு விழாவிற்கு அழைத்தாலும் அவ்விழாவில் கலந்து சிறப்பிப்பவர். சமயப் பணிகளுக்காக அயராது உழைப்பவர். இவர் சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மேலும் ஓவியத்துறைக்காக வி. எம். எஸ். குணம், திருமதி. நூறுஸ்ஹீஸா மர்ஹூகின், ஒலிபரப்புத் துறைக்காக திரு. எம். மயில்வாகனம் ஆகியோர்களுக்கும் விருது வழங்கப்பட்டது.**

இவர்கள் அனைவரையும் கண்டி இலக்கியச் செய்திமடல் வாழ்த்துகின்றது. பாராட்டுகின்றது. இவ்விழாவில் கலை இலக்கிய, பத்திரிகைத்துறைக்காக நானும் கௌரவிக்கப்பட்டேன். என்னையும் ஒருவனாக மதித்து கௌரவித்த மலையக கலை, கலாசார சங்கத் தலைவர் நண்பர் ராஜா ஜெய்கின்ஸ் அவர்களுக்கு எனது தனிப்பட்ட நன்றிகள்

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச இலக்கிய விழா - 97

இலங்கை கலைக்கழகமும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய தமிழ், சிங்கள, ஆங்கில அரச இலக்கிய விழா 22. 09. 1997 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் எட்டு தமிழ் எழுத்தாளர்களுக்கு விருதுகளும், பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கலைக்கழக தமிழ் இலக்கிய குழுவின் தலைவர். பேராசிரியர் சி. தில்லைநாதன் முன்னிலையில் கௌரவ அமைச்சர்களான லக்ஷ்மன் ஜெயக்கொடி, பேராசிரியர் ஏ. வி. சுரவீர ஆகியோர்களால் வழங்கப்பட்டன. விருது பெற்ற எமது சகோதர எழுத்தாளர்கள் அனைவருக்கும் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், கண்டி இலக்கிய செய்தி மடலும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

### 1996ம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ் நூல்களுக்கான அரச இலக்கிய விழாப்பரிசுகள்.

| நூலின் பெயர் | நாவலாசிரியர் | துறை | பரிசு |
|---|---|---|---|
| 1. தசமங்களம் | என். கே. ரகுநாதன் | சிறுகதை | 30, 000 |
| 2. நடிகை மணி வீ வீ. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் | காரை சுந்தரம்பிள்ளை | | 30, 000 |
| 3. நந்தி உடையார் | அருணா செல்லத்துரை | நாடகம் | 30, 000 |
| 4. பனியில் மொழி எழுதி | யூ. எல். எம். அதீச் (சோலைக்கிளி) | கவிதை | 30, 000 |
| 5. மண்ணில் சமைந்த மனிதர்கள் | வ. அ. இராசரத்தினம் | நாவல் | 30,000 |
| 6. ஏணியும் தோணியும் | ரூபராணி ஜோசப் | சிறுவர் இலக்கியம் | 20,000 |
| 7. நாய் | த. தர்மகுலசிங்கம் | மொழி பெயர்ப்பு | 25,000 |
| 8. தமிழ், சிங்கள உறவு | த. கனகரத்தினம் | கலை, இலக்கிய, ஆய்வு | 30,000 |

### மலையகத் தமிழாராய்ச்சி மாநாடும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவும்

சென்ற மாதம் 13-14 ஆம் திகதிகளில் நுவரெலிய மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் விருது, சான்றிதழ், பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டோர் விபரம்.

| | |
|---|---|
| மல்லிகை சி. குமார் | டீ. ராஜகோபால் |
| பி. எம். லிங்கம் | எஸ். சண்முகநாதன் |
| எஸ். பி. தங்கவேல் | இரா. நாகலிங்கம் |
| முத்தையா மாஸ்டர் | மாத்தளை கார்த்திகேசு |
| அ. ஆ. ராஜேந்திரன் | பேராசிரியர் கலாகீர்த்தி |
| பி. மரியதாஸ் | எஸ். தில்லைநாதன் |
| வெலிங்டன் பாடசாலை | மு. சிவலிங்கம் |
| முத்து சம்பந்தர் | இரா. அ. இராமன் |
| கே. கோவிந்தராஜ் | அந்தனி ஜீவா |
| சோ. ஸ்ரீதரன் | ஜெ. பிரான்சிஸ் |
| எஸ் டி. தியாகராஜா | ஸ்ரீதரன் பெரியசாமி |
| ஸ்ரீலங்கா சிகாமணி இரத்தின சபாபதி ஜே. பி. | |
| எஸ் முத்தையா ஜே. பி. | துரை விஸ்வநாதன் |
| எஸ். மகாலிங்கம் | ஜெ. சுகுமார் |
| சாந்தா ராஜகோபால் | ஹூட்சைட் கருணாநிதி |
| டாக்டர் தி. ஞானசேகரம் | பெ. முத்துலிங்கம் |
| பேராசிரியர் எஸ். மூக்கையா | எஸ். முரளிதரன் |
| டீ. ஆர். ஆர். செல்வராஜா | |

இவர்கள் அனைவருக்கும் கண்டி இலக்கியச் செய்திமடல் தனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

## நல்ல மனம் வாழ்க
### அகில இலங்கை சமாதான நீதவான் நியமனம்



ஒரு நல்ல மனிதனை அவனது முகத்திலே காணலாம். அவனுடைய அமைதியான பேச்சிலே காணலாம், மற்றவர்களை மதிப்பதிலே, சிரித்த முகத்திலே காணலாம். அந்த வகையிலே ஒரு நல்ல மனிதனை காணுகின்றேன். அவர்தான் சிறிலங்கா சிகாமணி - இறைபணிச் செம்மல் நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்களின் மகன் மோகன் இரத்தினசபாபதி.

தந்தையைப் போலவே சமூக உணர்வு கொண்டவர். கலை இலக்கியவாதிகளை நேசிப்பவர், அவர்களின் இலக்கிய உணர்வுகளை மதிப்பவர். தந்தை ஆற்றும் சமூகப்பணிகளுக்கெல்லாம் உந்து சக்தியாக இருப்பவர்.

ஒரு வர்த்தகராக இருந்தாலும் பணத்தை மட்டும் குறிக்கோளாக கொண்டவரல்ல. இச்சமூகத்திற்கு, மலையக இலக்கியவாதிகளுக்கு ஏதாவது நன்மைகள் செய்யவேண்டும் என்ற நல்லுணர்வு கொண்டவர்.

கண்டி திரித்துவக் கல்லூரி பழைய மாணவரான இவர் தனது தந்தையைப் போலவே மேலும் இச்சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும். இவரின் சமூகத்தொண்டுகள் தொடர மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும், கண்டி இலக்கியச் செய்தி மடலும் வாழ்த்துகின்றது.

-ஆசிரியர் -

## எழுத்தாளர் நாமதேவனுக்கு பதவி உயர்வு



எழுத்தாளரும், கண்டி விவேகானந்தா வித்தியாலயத்தின் அதிபருமான எம். நாமதேவன் அட்டன் கோட்டக்கல்விப் பணிமனை (தமிழ்ப்பிரிவு - 1) கல்வி அதிகாரியாக கடந்த 1. 9. 97 அன்று முதல் பதவியேற்றுள்ளார். தோட்டப்பாடசாலை ஒன்றில் தனது கல்வியை ஆரம்பித்த இவர், பேராதனை தமிழ் வித்தியாலயத்தில் படிப்பை முடித்துக் கொண்டு வவுனியா அரசினர் விவசாயப் பாடசாலையில் ஒரு வருட பயிற்சியை நிறைவு செய்த பின் 1968 ஆம் ஆண்டு பள்ளேகல. கெங்கல்ல தமிழ் வித்தியாலயத்தில் விவசாய ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்தார். 1973 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி மடுல்கலை கந்தகட்டிய தமிழ் வித்தியாலயம், கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலை ஆகியவற்றில் கடமையாற்றியுள்ளார்.

கடந்த 01. 01. 1998 முதல் கண்டி விவேகானந்தா வித்தியாலயத்தின் (முன்பு கண்டி சீ. சீ. த. வி.) அதிபராகக் கடமையேற்று ஒன்பது ஆண்டுகள் மாத்திரமே பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. கல்வியில் மிகவும் கீழ் மட்டத்திலிருந்த இவ்வித்தியாலயத்தினை முன்னேற்றகரமான நிலைக்கு கொண்டு வர மிகவும் சிரமப்பட்டவர். அதன் காரணமாக க. பொ. த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் சிறந்தவையாக அமைந்ததோடு உயர்தர கலை, விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளில் பல மாணவர்கள் சேரும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறு சாதாரண, உயர்தர வகுப்புகளில் சித்தியடைந்த மாணவர்கள் அன்னாரை நன்றியுடன் பாராட்டுகின்றார்கள். இவரின் காலப்பகுதியே இவ்வித்தியாலயத்தின் சிறந்த வளர்ச்சிக் காலமாக பெற்றோர்களாலும், கல்விப்பகுதியாலும் கருதப்படுகின்றது. இவரது சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், வீரகேசரி, சிந்தாமணி, கொந்தளிப்பு, குன்றின் குரல், கண்டி இலக்கியச் செய்தி மடல் போன்ற பத்திரிகைகள், சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளது.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நெஞ்சில் நிறைந்த
நன்றி! நன்றி!! நன்றி!!!

**28. 02. 1998** அன்று மிக சிறப்பாக
நடைபெற்ற எனது மகள்
**ஏஞ்சலாவின்**
திருமணத்தில் கலந்து சிறப்பித்த
பாராளுமன்ற உறுப்பினர்கள்,
அமைச்சர்கள், பேராசிரியர்கள்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
எழுத்தாளர்கள், கலைஞர்கள்,
வர்த்தகப் பெருமக்கள், நண்பர்கள்,
மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும்
எனது நெஞ்சில் நிறைந்த
நன்றிகள்.

*- இரா. அ. இராமன் -*

கண்டியிலே REVISON-A/L 98
MARCH-09 முதல்
**ACCOUNTING / BUSINESS STUDIES**
Modal பரீட்சையும் விளக்கப்பயிற்சியும்
(திங்கள்தோறும் 9a.m.-1p.m. வரை)
Past Paper அலகு ரீதியான மீட்டல்
(சனிதோறும் 2.p. m.-4.30p.m. வரை)
வணிகக் கல்வி பல்தேர்வு வினாப்பயிற்சி
(ஞாயிறுதோறும் 9.a.m.-11.a.m. வரை
மலையகம் வியக்கும் "A" சித்திகள் பல எமக்கு வருடங்கள்
தோறும் பெருமை சேர்க்கும் ஜனரஞ்சக ஆசான்
**I. P. சதாரூபன் B. Sc.**
(Special Business Adminstration) Hons Dip in Edu
**EPInstitute**
83, Katugastota Road,
KANDY.
* A/L 2000 மிக விரைவில் ஆரம்பம்

**A/L, G.A.Q, B.A**
தமிழ்
பாடத்தை நீங்கள்
நம்பிக்கையுணர்வுடன்
இலகுவாகக் கற்றிட
நம்பிக்கையுடன்
நாட வேண்டியவர்
**ஸ்ரீகரன்**
B. A. (Hons) Tamil
**G. A. Q.**
8.30-10.30 a. m.சனி
**A/L Revision**
9-11 a.m.ஞாயிறு
**A/L/99 Theory**
1.15-3.00 p.m.ஞாயிறு
**A/L 98**
7.30-9.30 a.m. ஞாயிறு
**B. A. Theory**
3.00-5.00 p.m.ஞாயிறு
**EPI**
83, Katugastota Road,
Kandy.

*அன்பான உங்களுக்கு..................*

இதோ 9வது இதழ் உங்கள் பார்வைக்கு இதன் வளர்ச்சி, தொடர்ந்து இதன் வருகை உங்கள் கரங்களில்தான். நீங்கள் அனுப்பும் ஆண்டு சந்தா, அன்பளிப்பு செய்திமடல் உயிர் வாழும், இலக்கிய பணியாற்றும்.

-ஆசிரியர்-

**IDM COMPUTER STUDIES (PVT) LTD**
(Member of IDM Holdings Ltd.,)
Contact:
**IDM Computer Studies (Pvt) Ltd**
**No. 725, Peradeniya Road,**
**KANDY.**
Tel: 08 -224621 E-MAIL: idmkndy@lanka.ccom.lk

## கங்குலன் பக்கம்
### வாசிப்பு

மலையக பாடசாலை ஆசிரியர்களே, தொழிற் சங்கத் தலைவர்களே,

உங்களின் கவனத்துக்கு,

வாசிப்பு ஒருவனை முழுமனிதனாக்கும் என்று அறிஞர் ஒருவது சொல்லியிருப்பதாக ஆசிரியர்களாகிய நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் உண்மைதான்!

தோட்டத்தில், கிராமத்தில், நகரத்தில், நாட்டில், உலகத்தில் என்ன நடக்கிறது என்பதை பத்திரிகை, வானொலி, தெலைக்காட்சி போன்ற ஊடகங்கள் மூலமாக அறியக் கூடியதாக இருக்கிறது.

நம்மவர்களில் எத்தனைபேர் பத்திரிகை படிக்கிறார்கள், வானொலி கேட்கிறார்கள், தொலைக்காட்சி பார்க்கிறார்கள்? என்பது ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விடயம்.

**யாருக்காக இலக்கியம் படைக்கப்படுகின்றதோ? யாருடைய விமோசனத்துக்காக எழுதப்படுகின்றதோ, அந்த இலக்கியம், அந்த எழுத்து அந்த மக்களிடமே போய்ச் சேர வேண்டும். அவர்கள் அதைப் படிக்க வேண்டும்.**

அல்லது படிப்பறிவில்லா அவர்களுக்கு படித்தவர்கள் வாசித்துக் காட்டவேண்டும்!

மலையக மக்களின் அவல வாழ்க்கையைப் பற்றி எழுதப்படும் கட்டுரைகள், கதைகள் எல்லாம் இங்குமட்டுமல்ல வெளிநாடுகளிலும் விமர்சிக்கப்படுகின்றன. கிலாகிக்கப்படுகின்றன.

ஆனால், இவ்வெழுத்துக்கள் மலையக மக்களை சென்றடையாது இலக்கிய உலகுக்குள்ளேயே நின்று விடுகின்றன!

தோட்டத் தொழிலாளர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கிடையேதான் நேரடித் தொடர்புகள் உள்ளன. ஒவ்வொரு தொழிற்சங்கமும் வெளியிடும் மாதாந்த, காலாண்டு வருடாந்த பத்திரிகைகள் மாத்திரமே தோட்டங்களுக்குப் போய்ச்சேர்கின்றன.

அவைகளில்,

இன்னாருக்கு இத்தனை ரூபா நஷ்டஈடு கொடுக்கப்பட்டது.

இன்னாருக்கு மீண்டும் தோட்டத்தில் வேலை வழங்கப்பட்டது.

இன்னாருக்கு பென்ஷன் வழங்கப்பட்டது போன்ற செய்திகளும் தொழிற்சங்கவாதிகளின் பேச்சுகளும்தான் தொழிலாளர்களைச் சென்றடைகின்றன.

இதுவரையும் மலையக மக்களைப்பற்றி அவர்கள் வாழ்க்கைப்பற்றி, மலையக பாரம்பரிய கலைகள் பற்றியெல்லாம் எத்தனையோ நூல்கள் வெளிவந்து விட்டன.

இவைகளை தோட்டத்தில் உள்ளவர்களில் ஒரு சதவீதமானவர்கள் கூட வாசித்திருக்கமாட்டார்கள் என்று அடித்துச் சொல்லலாம்.

மலையக நகரங்களில் கொழும்பில் செட்டித்தெருவில், மெயின் வீதியில், குறுக்குத் தெருக்களில், நாட்டின் எல்லா சைவக்கடைகளில் வியாபாரம் செய்வோரும் வேலை செய்வோரும் மலையகத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இவர்களில் எத்தனைபேர் தினசரி பத்திரிகை படிக்கிறார்கள்? எத்தனைபேர் மலையகம் சம்பந்தமான நூல்களை வாசிக்கிறார்கள்?

இவ்வளவுக்கும் நம்நாட்டில் தினசரி தமிழ் பத்திரிகைகளின் விலை ஐந்து ரூபா மட்டுமே.

எதற்கும் ஓர் ஆரம்பம் வேண்டுமில்லையா?

பாடசாலையில் படிக்கும்போதே மாணவர்களே பத்திரிகை புத்தகங்கள் வாசிப்பதை ஆசிரியர்கள் ஊக்கப்படுத்த வேண்டும்!

அப்படி ஆசிரியர்கள் மாணவர்களை பழக்கப்படுத்தியிருந்தால் இன்று மலையகத்தில் படித்துவிட்டு வந்து கொழும்பில் வேலை பார்ப்பவர்கள் தினசரி பேப்பர் படிப்பதிலும், புத்தகங்கள் வாசிப்பதிலும் கவனம் செலுத்தி இருப்பார்கள்!

மாணவர்களை விடுங்கள். மலையக ஆசிரியர்மார்களில் எத்தனைபேர் பத்திரிகை வாங்கிப்படிக்கிறார்கள்? புத்தகங்களை காசுகொடுத்து வாங்குகிறார்கள்? உண்மையைச் சொன்னால் வெட்கக்கேடான விஷயந்தான்!

**பல்கலைக்கழகங்களுக்கு போகும் மலையக ஆசிரியர்மார்களிடம் மலையக இலக்கிய சிற்பி என். எஸ். எம். ராமையா, தெளிவத்தை ஜோசப் போன்றோர்களின் பெயர்களை சொன்னால் யார் இவர்கள்? என்று கேட்கிறார்களாம். அப்படி இருக்கிறது நம்மவர்களின் வாசிப்புத்திறன்!**

மலையக தொழிற்சங்கங்களே! கடந்த மாதம் நான்கு லட்சம் பேரை வேலை நிறுத்தம் செய்ய வைத்தீர்களே! இவர்களுக்கு அறிவுக்கண் திறக்க வைக்கும் காலம் எப்போது வரும் என்று 'மலையகம்' காத்திருக்கிறது.

(நன்றி - தினகரன் வாரமலர் - 08.03.98)

கண்டி பூரணவத்தை 18/13ச் சேர்ந்த இரா. அ. இராமன் ஆகிய என்னால் கண்டி டி. எஸ். சேனாநாயக்க வீதி, இல. 302, லதா இம்பிரின்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொ. பே. 074-471608

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org